# உண்பதும் உடுப்பதும் பொதுவே

கதை: இ.ஜே.சுந்தர் ஓவியம்: ஷேக்




நடந்துகொண்டே மூவரும் ஊருக்கு வெளியே உள்ள வேடனின் இருப்பிடத்திற்கு வருகின்றனர்.
நக்கீரர்: இதுதான் உன் குடிலா ? இவ்வளவு ஏழ்மையிலா இருக்கிறீர்கள்?
வேடன்: வேட்டைத்தொழில் தவிர வேறு அறியேன். கல்வி கற்க வசதியில்லை. கற்றிருந்தால் உங்களைப்போலப் புலவனாயிருப்பேன்.
3
வேடன் மனைவி: உணவும் உடையும் வேண்டுமே. அதற்காகவே இரவும் பகலும் கண்விழித்து வேட்டையாடுகிறார். வேட்டைத் தொழிலால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம்.
4
நக்கீரர்: உனக்கு வரும் பசிதானே அரசனுக்கும்! ஒரு நாழி* அளவு உணவு உண்டாலே உனக்கும் அரசனுக்கும் பசிதீருமே.
வேடன் மனைவி: ஐயா! அரசருடன் இவரை ஒப்பிடுவது சரியா ?
(*ஒரு நாழி= 400 கிராம்)
5


நக்கீரர்: செல்வத்தில் மிதக்கும் அரசன் வைரத்தால் வறுவல் செய்து, தங்கஅணிகளால் அவியல் செய்து, மணிகளை அரிசியாக அவித்து உண்ண முடியுமா?
வேடன்: ஆனால் அவர் செல்வச்செழிப்பை உடுத்தும் ஆடையில் காட்டுவாரே?
6
நக்கீரர்: ஒரே நேரத்தில் 10 உடைகளை உடுத்திக்கொள்வாரா? உனக்கும் அவருக்கும் மேலாடை கீழாடை இரண்டுதானே. பசி தீர்க்க ஒரு நாழி தானியமும், உடல் மறைக்க ஈராடையும் அவருக்கும் போதுமே.
வேடன் மனைவி: உண்மை! பேருண்மை!!
7
நக்கீரர்: இதைவிடப் பெரிய உண்மையைச் சொல்கிறேன் கேளுங்கள்...
8
(மறைவில் நின்றிருந்த மனிதர் தம் வேடத்தைக் கலைக்கிறார்)
அனைவரும்: ஆ! மாமன்னரா?
9



வேடன் : வேந்தே! புலவரை மன்னியுங்கள், ஒன்றும் செய்துவிடாதீர்கள்.
10
மன்னன்: மாறுவேடத்தில் நகர்வலம் வந்தேன். அனைத்தும் கேட்டேன். மேலும் அவர் பேசட்டும். சொல்ல வந்த பெரிய உண்மையைச் சொல்லுங்கள்.
நக்கீரர்: உண்மை சொல்வதில் எனக்கு அச்சமில்லை. பெருஞ்செல்வத்தை ஈட்டுவதன் பயனே, இல்லாதவர்களுக்கு வழங்குதல்தான். பகிர்தலே பேரின்பம். தாமே துய்க்க நினைப்பவர்கள் வாழ்க்கையில் தவறவிடுவது மிகுதி. வீழ்ச்சியும் உறுதி.
11
மன்னன்: கடல் சூழ் தரணி முழுவதும் என் வெண்கொற்றக் குடையின் கீழ் வரவேண்டுமெனப் பேராசைப்பட்டேன். செல்வம் அனைத்தும் நானே துய்க்கும் மயக்கத்தில் இருந்தேன். என் கண்களைத் திறந்தீர்!.
பேருண்மை புகன்றீர்! உண்பதும் உடுப்பதும் இந்த வேடனுக்கும் எனக்கும் பொது என உணர்த்தினீர்!
இனி என் மக்கள் அனைவருக்கும் என் செல்வத்தைப் பொதுவாக்குவேன். இனி என் நாட்டில் இல்லாதவர் இல்லை என்றாக்குவேன். என் போன்ற மன்னர்களுக்கும் உணர்த்த இந்த உண்மையைப் பாடலாக்குங்கள்.
நக்கீரர் பாடுகிறார்:
தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.
(புறம்: 189)
12